**நாரம்மல பிரதேச சபை**
**குருணாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 26 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 மே 30 ஆந்திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜுன் 20 ஆந்திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நாரம்மல பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 75,000 பெறுமதியான வெலிகும்புரவத்த காணியின் பெறுமதி நிதிக்கூற்றுகளில் இரு தடவைகள் பதியப்பட்ட காரணத்தினால் காணியின் பெறுமதி ரூபா 75,000 இனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | சரியான பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | 2019 இன் நிலையான சொத்துக்கள் ஆவணத்தை சரியாகத் தயாரித்து கணக்கை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | ரூபா 2,082,100 பெறுமதியான காணி கணக்கீடு செய்யப்படவில்லை. | நிலையான சொத்துக்கள் சரியான முறையில் ஆவணப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | 2019 இன் நிலையான சொத்துக்கள் ஆவணத்தை சரியாகத் தயாரித்து கணக்கை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (இ) | ரூபா 126,500 பெறுமதியான ஹீரோ வகை மிதி வண்டியின் பெறுமதி கணக்கீடு | சரியாக இனங்கண்டு கணக்கீடு | 2019 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்படவில்லை. | செய்யப்பட வேண்டும். | மேற்கொள்ளப்படும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுகளில் காணப்படும் 02 கணக்கீட்டு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அவற்றிற்கு உரிய உப ஏடுகளில் காணப்படும் மீதிகளுக்கு இடையில் ரூபா 1,124,926 இணக்கமின்மை காணப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை ஒப்பிட்டு கணக்கை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்படும். | 2019 ஆம் ஆண்டில் நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (உ) | ரூபா 9,760,004 பெறுமதியான 02 கணக்கு விடயங்களிற்குரிய பத்திரம், ஒப்படை ஆணை, மதிப்பீட்டுக் குழு அறிக்கை மற்றும் ஆவணங்கள் கணக்கீட்டுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுகளில் காணப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தக் கூடிய சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், 2019 ஆம் ஆண்டில் கணக்குகளைத் தயாரிப்பதற்காக அவ்வாவணங்கள் அனைத்தும் தயாரிக்கப்படுகின்றன. |

## 1.4 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி<br>(i) விதி 206 | வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளின் பிரதி கணக்காய்வாளருக்கு அனுப்பப்படவில்லை. | வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளின் பிரதி கணக்காய்வாளருக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளின் பிரதி கணக்காய்வாளருக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| | (ii) விதி 218 | காணி மற்றும் கட்டடம் தொடர்பாக வருடாந்த மதிப்பீடு நடாத்தப்படவில்லை. | காணி மதிப்பீடு செய்யப்பட்டு ஆவணங்கள் நாளது வரையறுக்கப்பட வேண்டும். | தற்போது காணி மற்றும் கட்டடம் என்பனவற்றை சரியாக இனங்காணுவதற்கு முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டு தகவல்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | திரட்டப்படுவதுடன் எதிர்வரும் ஆண்டுகளில் இருந்து வருடாந்தம் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 571 | 2 வருட காலத்தைத் விஞ்சிய ரூபா 2,031,876 பெறுமதியான 214 வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாண ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | நாரம்மல புதிய வர்த்தக நிலையம், நாரம்மல பொது வியாபார நிலையம் மற்றும் நரம்மல பழைய வர்த்தக நிலையம் என்பனவற்றின் ஒப்பந்தம் மற்றும் பாதுகாப்பு பிணை என்பனவற்றின் 02 வருடங்களுக்கு மேற்பட்ட வைப்பு காணப்படுவதுடன் ஒரே தரப்பினர் அக்கடைகளைத் தொடர்ந்து குத்தகைக்கு எடுத்த காரணத்தினால் இவ்வைப்புக்களை மீண்டும் செலுத்துவதற்கு அல்லது வருமானமாகப் பெற்றுக் கொள்வதற்கு முடியாது எனக் குறிப்பிடுகின்றேன். |
| (இ) | 2002 நவெம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/2 ஆம் இலக்க அரச கணக்கீட்டு சுற்றறிக்கை | கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென் பொருள் என்பன தொடர்பாக நிலையான வைப்புப் பதிவேடொன்று பராமறிக்கப்படவில்லை. | கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென் பொருள் என்பன தொடர்பாக நிலையான வைப்புப் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென் பொருள் என்பன தொடர்பாக நிலையான வைப்புப் பதிவேடொன்றை பேணுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 25,146,518 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 32,882,207 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | வீதவரியும் வரியும் | 8,443 | 12,536 | 12,022 | 2,402 | 5,956 | 5,010 | 4,617 | 1,739 |
| (ii) | வாடகை | 25,430 | 24,227 | 24,166 | 145 | 21,792 | 22,307 | 22,448 | 101 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,311 | 1,013 | 1,013 | - | 2,151 | 2,355 | 2,355 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 75,841 | 80,785 | 116,734 | 32,465 | 72,815 | 79,641 | 79,577 | 17,423 |
| | மொத்தம் | 111,025 | 118,561 | 153,935 | 35,012 | 102,714 | 109,313 | 108,997 | 19,263 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 2,240,292 பெறுமதியான தொகையில் 2019 ஏப்பிரல் 30 திகதி வரையில் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 1,207,616 ஆகும். | நிலுவையாகக் காணப்படும் வரி அறவிடப்பட வேண்டும். | மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதிக்கு நிலுவையாகக் காணப்படும் நிலுவை வீதவரியில் 2019 ஏப்ரல் 30 திகதி வரையில் அறவிடப்பட்ட தொகை ரூபா 1,032,676 ஆகும். |

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **நீதிமன்றத் தண்டப்பணம்**<br><br>2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டியதாக காணப்பட்ட நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 7,140,026 மற்றும் முத்திரைக்கட்டணம் ரூபா 24,680,039 ஆகும். | கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டும். | நீதிமன்றத் தண்டப்பணம், முத்திரை கட்டணம் என்பனவற்றில் தற்போது அறவிடப்பட்ட தொகை ரூபா 2,464,427 ஆகும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிறப்பிக்கப்பட்ட உப விதிகளுக்கு இணங்க சபையினால் செயற்படுத்தப்பட வேண்டிய 04 செயற்றிட்டங்கள் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சபையினால் செயற்படுத்தப்பட வேண்டிய செயற்றிட்டங்கள் சரியாக இனங்காணப்பட்டு செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | சபையினால் வருடாந்தம் செயல்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் அனைத்தும் உள்ளடக்கப்பட்டு வருடாந்த அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) சுற்றாடல்சார் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 2,330,807 செலவிடப்பட்டு நிரமாணிக்கப்பட்டிருந்த நாரம்மல மக்கள் வங்கிக்கு அண்மையிலுள்ள பொது மலசலகூட நிர்மாணப் பணிகளில் காணப்படும் பலவீனம் காரணமாக அடிக்கடி நிரம்பி வழிவதனால் மலசலகூடக் குழியிலிருந்து அடிக்கடி கழிவு நீர் | ஏற்பட்டுள்ள சுற்றாடல் பிரச்சினையை குறைப்பதற்கு உரிய தீர்மானம் எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக உள்ளூராட்சி மன்ற பொறியியலாளரிற்கு அறிவிக்கப்பட்டு ஆலோசனை பெறப்பட்டு அதற்கு அமைய நடவடிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், தற்போது உள்ளூராட்சிமன்ற |

| | | |
|---|---|---|
| அகற்றப்படுவதனால் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் 7 சந்தர்ப்பங்களில் ரூபா 108,410 செலவிடப்பட்டிருந்தது. எனினும், இதனை வழமையான நிலைமைக்குக் கொண்டு வராது 2018 செப்தெம்பர் மாத சபை முடிவின் படி கலி பவுஸர் ஒன்று கொள்வனவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | | பொறியியலாளருக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டதன் பின் தற்போது முகம் கழுவுவதற்கு வைக்கப்பட்டுள்ள பேஸன்களில் இருந்து கழிவு நீர் மலசலகூடத்தினுள் செல்லாது அமைத்துக் கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக இருந்து வரும் செலுத்த வேண்டிய நிலுவை ரூபா 7,045,594 ஐ அறவிடுவதற்கு சபை நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்படும் வைப்பாகும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

**ஊழியர் வெற்றிடங்களும் மிகையும்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 06ஆரம்ப நிலை பதவிகளுக்குரிய 12 உத்தியோகத்தர்கள் மற்றும் 06 பதவிகளுக்கு 11 தற்காலிக ஊழியர்கள் மேலதிகமாக சேவையில் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர். | தற்காலிக ஊழியர்களை அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 25/2014 இற்கு அமைய நிரந்தரமாக்கப்பட்ட கனிஷ்ட நிலை பதவி வெற்றிடங்களில் 06 பதவிகளுக்குரிய 11 தற்காலிக ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ளதுடன், அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக முகாமைத்துவ திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 பொறுப்பேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஒலியாதெனிய திண்மக் கழிவு மத்திய நிலையம் மற்றும் மயானம் காணப்படும் காணி, தெலிகனு அங்க தாய், சேய் நலன்புரி நிலையம் என்பனவற்றின் காணிகள் பொறுப்பேற்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை பொறுப்பேற்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | தெலிகனு அங்க தாய், சேய் நலன்புரி நிலையம் அமைந்துள்ள காணியைப் பொறுப்பேற்பதற்கு பிரதேச செயலாளருக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளதுடன் ஒலியாதெனிய மயானம் காணப்படும் காணி வரையறுக்கப்பட்ட கைத்தொழில் கூட்டுத்தாபனத்திற்கு உரியதாகையால் தற்போது அதனையும் பொறுப்பேற் பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

## 3.5 கொள்வனவு

### கொள்வனவுத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கொள்வனவு திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | வழிகாட்டலுக்கு அமைய செயற்பட வேண்டும் | 2018 ஆம் ஆண்டிற்கான கொள்வனவு திட்டம் தயாரிக்கப்படவில்லை. |